**செய்தி வெளியீடு எண்:1226** **நாள்:28.11.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் இன்று (28.11.2021) மழைநீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

வட மேற்கு பருவ மழையின் காரணமாக சென்னையில் பல்வேறு பகுதிகளில் மழைநீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் இன்று (28.11.2021) வழங்கினார்கள்.

அதில், காலை 9 மணியளவில், சிந்தாதிரிப்பேட்டை மார்கெட் அருகில் உள்ள காமாட்சி மீனாட்சி திருமண மண்டபத்தில் திரு.மதன்மோகன் திமுக., செயலாளர், சேப்பாக்கம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், தையல் மெஷின்கள், ஆன்லைன் மூலம் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு செல்போன்கள், லேப்டாப்கள், மிதிவண்டிகள், மிக்சிகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பைகள் ஆகியவை சுமார் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கினார்கள்.

அதை தொடர்ந்து, காலை 10 மணியளவில், ராஜா அண்ணாமலை மன்றத்தில், மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், 300 ஆட்டோ ஓட்டுனர்களுக்கு ரூ.2000 மதிப்பிலான அத்தியாவசிய பொருட்களுடன் ரூ.500/- பண முடிப்பும் வழங்கினார்கள். மேலும் மழைநீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒரு ஆட்டோ

ஓட்டுனருக்கு ஒரு புதிய ஆட்டோ வழங்கினார்கள். அதை தொடர்ந்து காலை 11 மணியளவில், வில்லிவாக்கம், சிட்கோ நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் திரு.பாலா, திமுக. இளைஞர் அணி துணை அமைப்பாளர், சென்னை கிழக்கு மாவட்டம் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பை முடிப்பு சுமார் 500 நபர்களுக்கு வழங்கினார்கள். மேலும், செல்வி நகர் 70 அடி சாலையில் உள்ள வடிகால்களை மழைநீர் தேங்காமல் வடிவதை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார் அதை தொடர்ந்து குமரன் நகரில் உள்ள வடிகால்களில், மழைநீர் தேங்காமல் ஓடுகிறதா என்று மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்களுடன் மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் நேரில் சென்று ஆய்வு செய்தார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**